


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 4 ஏப்ரல் 2004 கனி 5

ஆண்டு சந்தா Rs.50/-

ஆசிரியர்

B. அர்ஜுனன்

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் பதினான்காவது மாவட்ட வாசகர் கருத்தரங்கு

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கிற்கு நீலகிரி மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** 1992 முதல் 2003 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு. இந்த பதினான்காவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை. எதில்காலத்தில் நமது இதழின் இலக்கு.

**நாள் :** ஏப்ரல் 24-ம் தேதி சனிக்கிழமை, காலை 10-00 மணி

**இடம் :** கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,
K.பாலாடா,கேத்தி-643 215
நீலகிரி மாவட்டம்.

**THE WORD OF CHRIST**
**BATLAGUNDU**
**PHONE : 954543-263278**

கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்
சகோ. பிரபுதாஸ் மல்லி
போன் 95423-2517043

## வெற்றிக்கு ஐந்து முதன்மைகள்

1. **முதலாம் மணி வேளையை** தேவனுக்குக் கொடு.
2. வாரத்தின் **முதலாம் நாளை** தேவனுக்குக் கொடு.
3. **உன்னுடைய வருமானத்தின் முதற் பலனை** தேவனுக்குக் கொடு.
4. **ஒவ்வொரு தீர்மானத்தில் முதல் யோசனையை** தேவனுக்குக் கொடு.
5. உன்னுடைய இருதயத்தில் **முதலிடம்** தேவனுக்குக் கொடு.

*இது உண்மையாகவே அதிகக்கிரியை நடப்பிக்கிறது!*

**-The Voice of Truth International**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

திவேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 4 ஏப்ரல் - 2004 கனி - 5

ஆசிரியவுரை

# மாதிரி - an exampl e



மாதிரி என்றால் ஒன்றைப்போல் மற்றொன்று. அதையே மாதிரி என்று சொல்லுவோம். இவ்வுலகத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார். அதுஎந்தவிதமான மாதிரி என்பதைக் குறித்து இச்செய்தியின் மூலமாக உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறோன்.

இயேசுவை சரீரபிரகாரமாக பார்த்தவர்கள் அவரைப்போல சரீரத்தில் இருக்க விரும்பி இருப்பார்கள். இன்றும்கூட அவரை கற்பனை செய்து பார்த்து அவரைப்போல இருக்க விரும்புகிறார்கள். இது மாமிசபிரகாரமான ஆசை. ஆனால் பரிசுத்த வேதாகமம் "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்"(1பேது.2:21-23) இந்தவிதமான மாதிரியைப்பின் வைத்துப்போனார் என்று சொல்லுகிறது. இவ் வசனங்களிலே நாம் கவனிக்கவேண்டிய முக்கிய பகுதி "நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்" என்பதே!அப்படியென்றால் நாம் அவருடைய அடிச்சுவடுகள் நிறைந்த வேதாகமத்தை புரட்டிப்பார்த்து அவைகளின் படியாக அவருடைய மாதிரியைப் பின் பற்றவேண்டியது மிக அவசியம்.

இயேசு தம்மை பின் பற்றி வரவிரும்புகிற ஒருவனுக்கு சொல்லும் வசனம்: "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்"(மத்.16:24). தன்னையே வெறுக்காத ஒரு மனிதன்

இயேசுவை எப்படி பின்பற்ற முடியும்? சற்று யோசித்துப்பாருங்கள். தன்னையே வெறுப்பது என்பது தன்னையே அழித்துக்கொள்ளும் செயல் அல்ல. தன்னிலே இருக்கும் பாவச்செயல்களை களைந்து போடுவது. இன்று கிறிஸ்துவை பின்பற்றும் கிறிஸ்தவர்களில் அநேகர் கிறிஸ்துவைப் பார்ப்பதில்லை பெயர் கிறிஸ்தவர்களை பார்த்தே தங்களை மாற்றிக்கொள்கிறார்கள். எங்கே இயேசுவைப் பார்த்தால் அவருக்கு கிடைத்த ஒரு வஸ்திரம் தான் நமக்கும் கிடைக்கும், பின்பு அதையும் பங்கிட்டு கொள்வார்கள் என்ற பயமோ! ஏனோ தெரியவில்லை. மேலிருந்து வந்தவருடைய மாதிரியைக் காட்டிலும், மேலை நாட்டு கலாச்சாரம் நம் ஜனங்களை தொற்றுநோயைப்போல் தொற்றிக்கொண்டிருக்கிறது. மாதிரி என்றால் அனைத்திலும் இயேசுவைப்போல மாதிரியாக ஜீவிக்கவேண்டும். பெயர் மட்டும் வைத்துக்கொண்டு செய்யும் செயல் எல்லாம் பிசாசின் செயல்களாகயிருந்தால் அவருடைய மாதிரி என்று சொல்லிவிட முடியுமா? நிச்சயமாக அவருடைய வசனம் அனைவரையும் ஒருநாள் நியாயந்தீர்க்கும் என்ற பய உணர்வோடு வாழப்பிரயாசப்படவேண்டும்.

***பாவமில்லாத மாதிரி***

"அவர் பாவஞ்செய்யவில்லை"(1பேது.2:22). இன்று உலகத்தில் எத்தனையோ மார்க்கங்கள் தோன்றியுள்ளன. அவைகளின் தலைவர்கள் அம்மார்க்கத்திற்கு முக்கியமானவராகவும் எல்லாருக்கும் மாதிரியாகவும் இருக்கிறார். அவர் பாவமில்லாதவரா? என்று நாம் கேட்போமானால் பாவத்தின் பிரதிநிதியாகத்தானிருப்பார். ஏனென்றால் "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள்" என்று(ரோ.3:23)ல் வாசிக்கின்றோம். ஆனால் நம்மை பாவத்திலிருந்து மீட்க வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"(1பேது.2:24). மேலும் "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" (1யோவா.3:5). ஒரு குருடன் ஒரு குருடனை வழிநடத்தமுடியாது. அதைப்போல பாவம் நிறைந்த ஒரு மனிதன் ஒரு பாவியை பாவத்திலிருந்து இரட்சிக்கமுடியாது. பாவமில்லாத இயேசு கிறிஸ்துவால்தான் முடியும். அவரை உங்களுடைய மாதிரியாகக் கொள்வீர்கள் என்றால் நித்தியம்வரை அவருடைய அடிச்சுவடுகள் உங்களை அழைத்துச்செல்லும்.

***வாயிலே வஞ்சனையில்லாத மாதிரி***

"அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை"(1பேது.2:22). உழைத்து சாப்பிடுகிறவர்கள் ஒரு கோடி, ஏமாற்றி சாப்பிடுகிறவர்கள் ஏழு கோடி என்பார்கள். உலகத்திலே ஏமாற்றுகிறவர்களே அதிகமிருக்கிறார்கள். "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன்

மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி"(நீதி.25:14). கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் இப்படியே இருக்கிறான். இப்படிப்பட்டவர்களுக்கு நம் நாட்டில் பஞ்சமில்லை. அதைச்செய்கிறோம் இதைச்செய்கிறோம் என்று சொல்லி கணக்குக்காக சிலவற்றை செய்து அநேகரை ஏமாற்றுவார்கள். இப்படிப்பட்டவர்கள் பொய்யர்களும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறார்கள். இவர்கள் "அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்"(வெளி.21:8). நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மண்டை வந்த ஒருவரையும் புறம்பே தள்ளாமல் அவர்களை சுகமாக்கி அனுப்பினார். "அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்"(அப்.10:38). இன்று வியாதியின் கொடுமை தாங்கமுடியாமல் மரிக்கின்ற எத்தனையோ மனிதர்களை பற்றி அனுதினமும் செய்திதாள்களின் வாயிலாக அறிகிறோம். அதேபோல் பிசாசின் தொல்லையால் அநேக குடும்பங்கள் பிரிந்தும் மரித்தும் போகிறதை அனுதின ஜீவியத்தில் காண்கிறோம். இப்படிப்பட்டவர்களை இயேசு தம்முடைய வல்லமையால் சுகப்படுத்தியும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்குகிறவருமாய் இருந்தார் என வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அவரை பின்பற்றுகிறவன் அவரைப்போல நன்மை செய்கிறவனாகவும், பிசாசின் பிடியிலிருக்கிறவர்களுக்கு நற்செய்தியை அறிவிக்கிறவனாகவும், மாற வேண்டியது எவ்வளவு அவசியம்!.

***நியாயமானவருக்கு தம்மை ஒப்புவித்த மாதிரி***

"அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்"(1பேது.2:23). நம்மக்களோ ஒரு வார்த்தை சொன்னால் ஒன்பது வார்த்தை சொல்வார்கள். கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதைப்போல தலைமுறை தலைமுறையாக அப்படியே வந்துகொண்டு இருப்பார்கள். எதற்கெடுத்தாலும் வெட்டு, குத்து,கொலை என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. இன்னும் சொல்லப்போனால் என்று துப்பாக்கி பிடிக்க மனிதன் கற்றுக்கொண்டானோ அன்றுமுதல் இன்றுவரை யாரையாவது சுட்டால்தான் கை சும்மாயிருக்கும் என்ற முடிவுக்கு வந்து விட்டான். ஆண்டவரோ! வாய்திறவாத ஆட்டைப்போல இருந்தார். அவரை ஜனங்கள் வையும்போது பதில் வையாமலும், அவர் சிலுவையில் அறைந்து தொங்கும்போது ஒருவரையும் பயமுறுத்தாமலும் இருந்தார். அவரை மாயக்காரன் என்றனர். அப்படி இருப்பாரானால் அவர் தம்முடைய மாயவித்தையினால் ஒரு பெரிய டயோனசாராகமாறி பயமுறுத்தியிருக்கலாம். அப்படி யாரையும் அவர் பயமுறுத்தவில்லை. "அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து


இறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்போது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும் அப்போது இவனை விசுவாசிப்போம்"(மத்.27:39-43) என்று சொல்லி அவரை தூஷித்து பரியாசம் பண்ணினார்கள். இவைகளை கேட்டுக் கொண்டிருந்த ஆண்டவர் அவர்களுக்கு மறுமொழியாக ஒன்றும் சொல்லாதிருந்து "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்"(லூக்.23:46). எத்தனையோ அற்புதங்களை செய்த ஆண்டவர் இங்கே ஒன்றும் சொல்லாதிருந்து தம்முடைய ஆவியை பிதாவானவருக்கு ஒப்புக்கொடுத்தார். இன்று உலகம் உலகத்தை சிநேகிக்கிறது. ஆகையால் ஒருசில கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போல பாடுகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இயேசுவை மாதிரியாக கொள்ளக்கூடிய கிறிஸ்தவர்கள் அவரைப்போல அமைதலாக இருக்கவேண்டியது அவசியம். "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்"(ரோம.6:13). ஆகையால் "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்"(1பேது.4:16).

இச்செய்தியை வாசித்த அருமையான சகோதரனே சகோதரியே இவ்வளவு காலமாக நீங்கள் யாரை மாதிரியாக கொண்டிருந்தீர்கள்? ஒருவேளை உலகத்தையும் உலகத்தார்களையும் மாதிரியாக கொண்டிருந்தால் இன்றே ஒரு தருணம் இயேசுவை மாதிரியாகக் கொண்டு அவருடைய அடிச்சுவட்டை மாதிரியாகவைத்து பின் தொடருங்கள். மாய்மாலமான மாதிரி நம்மை மயானத்திற்கு கொண்டு போகும், மனந்திரும்பி மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் மாதிரி நம்மை மத்தியஸ்தரிடம் கொண்டுசெல்லும். நீங்கள் எம்மாதிரியை பின்பற்றிச் செல்ல விரும்புகிறீர்கள்? "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"(எபி.13:8). மாறாத அவரை மாதிரியாகக் கொண்டு நீங்களும் மாறாதவர்களாயிருக்கப் பிரயாசப்படுங்கள்.

***"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல"(ரோம.8:9)***

# ஆராதனையில் என்ன சம்பந்தப்பட்டுள்ளது?
# What is involved in Worship?

J.C.Choate




இயேசு, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" என்றார் (யோவா.4:24). என்ன விசேஷித்த ஆனால் எளிமையான கூற்று இது!. தேவன் ஆவியாயிருக்கிறார், சகலவற்றையும் சிருஷ்டித்தவர், மேலும் அவர் ஆராதிக்கபட வேண்டியவர். ஆனால் அவர் ஆராதிக்கப்பட வேண்டியவரானால், மற்றும் நம்முடைய தொழுகை அவரால் ஏற்றுக் கொள்ளப் பட வேண்டுமானால், அது ஆவியோடும் உண்மையோடும் இருக்கவேண்டும். "ஆவி"எனக் குறிப்பிடுகையில் உண்மை, மனவெழுச்சி, சம்பந்தப்படுதல், மேலும் போற்றுவதற்கான விருப்பம்,மற்றும் தேவனை கனப்படுத்துவது போன்றவைகள் அதில் அடங்குகிறது. ஒருவன் என்ன செய்துகொண்டிருக்கிறான் என்பதை தன் மனதில் தொடர்ச்சியாக நிலை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்பதே இதன் பொருள், அவன் ஆராதனையின் ஒவ்வொரு பகுதியிலும் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும், மேலும் தன்னுடைய மனதை மற்றப்பொருட்களின் மேல் பறக்கவிட அனுமதிக்கக் கூடாது. "உண்மை" என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து, அவருடைய போதனையைப் பின்பற்றி, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்திருத்தலை குறிப்பிடுகிறது.

தேவன் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும், அது வாரத்தின் முதல் நாளில் (அப்.20:7), கர்த்தருடைய நாளில் (வெளி.1:10), நம்முடைய ஞாயிற்றுக் கிழமையில் நடைபெற வேண்டும் என விரும்புகிறார். அவர், மேலும் தம்முடைய பிள்ளைகளுக்கு, கிறிஸ்தவர்களுக்கு, கர்த்தருடைய சபை அங்கத்தினர்களுக்கு, அவர்களுடைய ஆராதனையில் பின்வரும் காரியங்களையும் சேர்த்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

1. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இது தேவன் தம்முடைய ஜனங்களோடு பேசுவதற்கான தேவனுடைய

வழியாகும். அவர் நம்மோடு நேரடியாக தனியாக மற்றும் தம்முடைய வார்த்தைக்கு மாறாக பேசுகிறவரல்ல, ஆனால் தம்முடைய வார்த்தையின் மூலம் மட்டுமே பேசுகிறார். தேவன் நமக்கு என்னவெல்லாம் கூற விரும்பினாரோ அவையனைத்தும் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது இரட்சிப்பைப் பற்றி, சபையைப் பற்றி, கிறிஸ்தவ வாழ்வைப் பற்றி, பரலோகத்தைப்பற்றி, மேலும் நரகத்தைப்பற்றிய அனைத்தும் வெளிப்படையாக அங்கே எழுதப்பட்டுள்ளது. ஆனபடியால் நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுத் தெரிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் நாம் தேவனுக்கு முன்பாக உத்தமராக இருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமெனக் கூறுகிறார் (2தீமோ.2:15). மீண்டும், அவன் தேவனுடைய வார்த்தை எந்த நற்கிரியையுஞ் செய்ய முழுவதும் தகுதியுள்ளவனாக்குகிறது (2தீமோ.3:16,17) எனக் கூறுகிறான். மேலும் அவன் தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுகிறதினால் விசுவாசம் வருகிறது எனவும் கூறுகிறான் (ரோம.10:17).

2. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்படி வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதுவே தேவனிடத்தில் நாம் பேசுகின்ற வழியாகும். பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டவர்களாக சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்பு (அப். 2:37,38,47), அப்போஸ்தலர் 2:42 ல், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" என நாம் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் தொடர்ந்து அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தார்கள். அவற்றின் ஒரு பகுதி ஆராதனையாயிருந்தது, ஆராதனையின் ஒரு பகுதி ஜெபங்களை உள்ளடக்கியதாயிருந்தது. ஜெபத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் ஜெபத்தின் அவசியத்தைப் பற்றியும் பேசுகின்ற வேதாகம வசனங்கள் அநேகமுண்டு. பவுல் நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமெனவும் (1தெச.5:17), மேலும் நம்முடைய வேண்டுதல்களை நாம் தேவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும் (பிலி.4:6) எனவும் சொன்னான். நாம் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறோம் (லூக்.18:1), நாம் நம்முடைய மத்தியஸ்தரும், பரிந்துபேசுகிறவருமான கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் (யோவா.14:13; 1யோவா.2:1). மேலும் நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்கவேண்டும் (1யோவா.5:14,15).

3. கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பிதாவையும் அவருடைய குமாரனாகிய இயேசுவையும் பாடித்துதிக்கும்படி கர்த்தருடைய நாளில் கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல், "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர்

புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி" (எபே.5:19) என்றான். அவன் கொலோசெயர் 3:16 லும் 1கொரிந்தியர் 14:14,15லும் இதே கூற்றையே அறிவுறுத்தி, நாம் ஆவியோடும் புரிந்துகொள்ளுதலோடும் ஜெபிக்கவேண்டும் என்றான். கர்த்தருடைய ஜனங்கள் இயந்திரங்களான வாத்தியக் கருவிகளுடன் பாடியதாக புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் நாம் எங்கும் வாசிக்கிறதில்லை. மாறாக, நாம் நம்முடைய இருதயத்தில் பாடவேண்டியவர்களாயிருக்கிறோம் என்று பவுல் கூறுகிறான். வாயின் இசை, மனித குரல்நாண்களாகிய கருவியிலிருந்து வரும் பாட்டு உலகத்தில் மிகவும் அழகான இசையாகும். இவ்வகையான இசையே நாம் கர்த்தரை ஆராதிக்கும் போது கர்த்தர் விரும்புகிற இசையாகும்.

4. கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளிலே கர்த்தருடைய நினைவுகூருதலாகிய இராப்போஜனத்தில் பங்குகொள்ளும்படி கூடிவரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். நாம் இவ்வுலகில் இரட்சிக்கப்படவும், வரவிருக்கின்ற உலகில் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையுடைவர்களாயிருக்கவும் இயேசு சிலுவையிலே மரித்தார். ஆனபடியால், அவர் வாரத்தின் முதல் நாள்தோறும் பலியான தம்முடைய சரீரம் மற்றும் நமக்காக சகித்துக் கொண்ட பாடுகளின் நினைவுகூருதலாக புளிப்பில்லாத அப்பத்தில் பங்கு கொள்ளும்படி தம்முடைய ஜனங்களைக் கேட்டுக்கொண்டார் (மத்.26:26). நாம் நம்முடைய பாவங்களுக்கு மன்னிப்புண்டாயிருக்கும்படி சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்தின் நினைவுகூருதலாக திராட்சப்பழரச பாத்திரத்தில் பங்கு கொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம் (மத்.26:27,28).

5. இறுதியாக, நாம் நம்முடைய வருமானம் மற்றும் ஆஸ்தியின் ஒரு பங்கினை செலுத்தும்படிக்கு வாரத்தின் முதல் நாளிலே கூடி வரவேண்டியவர்களாயிருக்கிறோம். பவுல் கொரிந்து சபை கிறிஸ்தவர்களுக்கு. "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மபணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி. 16:1,2)என்றான். மேலும் அவன், "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2கொரி.16:1,2) என்றான். எனவே தேவன் எதை விரும்புகிறார்? அவர் தம்முடைய ஜனங்கள் தம்மை தொழுதுகொள்ளும்படியும்; சபைப் பணிக்கென அங்கே பணம் இருக்கும்படி நம்முடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியைக் கொடுக்கும்படியும் விரும்புகிறார். நாம் எவ்வளவு

கொடுக்கும்படி தேவன் விரும்புகிறார்? நாம் மனதில் நியமித்திருக்கிறபடி. அது எவ்வளவு? கண்டிப்பாக, பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழ் யூதர்கள் கொடுத்து வந்த பத்து சதவீதம் போல் அல்லது அதற்கும் மேல். எப்படி கொடுக்கவேண்டுமென தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார்? விசனமாயல்ல, ஆனால் நாம் மனதில் நியமித்திருக்கிறபடி, நாம் விசனமாய் அல்லது நிர்பந்தமான உணர்வுகளின் அடிப்படையில் கொடுப்போமானால், நாம் தேவனைப்பிரியப்படுத்துகின்ற வழியில் கொடுக்கிறவர்களாயில்லை. காயீனுடைய காணிக்கை புறக்கணிக்கப்பட்டது ஏனென்றால் அந்த காணிக்கை தேவன் கேட்டுக்கொண்டது போலல்ல, நம்முடைய காணிக்கையும் ஆவியோடும் உண்மையோடும் கொடுக்கப்படாவிட்டால் புறக்கணிக்கப்படும்.

இப்போது நாம் ஆராதனையின் இந்த செயல்களில் எதை விட்டு விட்டு தேவன் ஏற்றுக்கொள்ளுகிற வண்ணமாக ஆராதனை செய்யமுடியுமா? நிச்சயமாக ஒன்றைக் கூட நாம் தவிர்க்க முடியாது. இன்னும் சிலர் கர்த்தருடைய பந்தியில் மட்டும் பங்கு கொண்டாலே, அவர்கள் தொழுது கொண்டதாக எண்ணுகின்றனர். கர்த்தருடைய பந்தி முக்கியமானது, ஆனால் அதைப்போன்றே நம்முடைய வேதபாடம், நம்முடைய ஜெபம், நம்முடைய பாடல், நம்முடைய கொடுத்தல் போன்றவைகளும் முக்கியம். தயவுசெய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளில் தொழுதுகொள்ள திட்டமிடுங்கள், தொழுகையின் ஒவ்வொரு செயலிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள திட்டமிடுங்கள். இதுவே ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் நீங்கள் செய்யத்தக்க ஆராதனை செய்வதாகும்.

மேலும், நீங்கள் தொழுதுகொள்ளும்போது உங்களுடைய நினைவுகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறவற்றிற்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். தூக்கத்திற்கு இடமளிக்காதீர்கள், ஆராதனை செய்வதிலிருந்து விடுபட்டு உங்களுடைய மதியஉணவிற்காக நீங்கள் திட்டமிட்டிருக்கிறவற்றிற்கும் மேலும் ஆயிரக்கணக்கான மற்ற காரியங்களாகிய உங்களுடைய வேலையைப் பற்றி நினைப்பதற்கும் உங்கள் மனதை அலையவிடாதீர்கள். கர்த்தருடைய ஜனங்களோடு ஆராதனையில் நீங்கள் கூடிவந்தால், நீங்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதனையில் பங்குகொள்ளுங்கள், அதன் பிறகு நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள், மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் மகிமைப்படுத்தப்படுவார். நீங்கள் உங்களுடைய குடும்பத்திற்கும், உங்களுடைய நண்பர்களுக்கும், எல்லா உறவினர்களுக்கும் நல்ல மாதிரியை ஏற்படுத்துவீர்கள். தயவு செய்து ஒவ்வொரு கர்த்தருடைய நாளிலும் தொழுதுகொள்ளுங்கள், உங்களுடைய தொழுகை வேதாகமத்தின்படியாகவும் ஆவிக்கேற்றபடியாகவும் இருக்கக்கடவது. அதன்பிறகே கர்த்தர் அவற்றை ஏற்றுக்கொள்ளுவார்.

D.எபினேசர்

**உரையாடல் - 20**

தாவீது : சிறு பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிற வழக்கம் கத்தோலிக்க சபைகளிலும் மனிதரால் ஏற்படுத்தப்பட்ட இன்னும் பிற சபைகளிலும் இருக்கு. ஆனால் வேதவசனத்தின்படி அது தவறாகும்.

யோனத்தான் : அதை எப்படி தவறுன்னு சொல்றே? சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடை பண்ணாதிருங்கள் என்று ஆண்டவர் சொல்லவில்லையா?

தாவீது : ஞானஸ்நானம் எதுக்காக எடுக்கணும், எடுப்பதற்கு முன் என்னவெல்லாம் செய்யணும் என்று முன்பே பார்த்தோம். சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும் (எபே.1:13) அதை விசுவாசிக்கவேண்டும் (மாற்.16:16) பாவத்தைவிட்டு மனந்திரும்ப வேண்டும் (அப்.17:20; 2:38) அறிக்கையிட வேண்டும் (ரோம.10:9) இவைகளை செய்த பிறகு பாவ மன்னிப்புக்கென்று தண்ணீர் முழுக்கினால் சுத்திகரிக்கப்பட வேண்டும். அதாவது ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் (அப்.2:38) குழந்தை இவைகளைச் செய்யுமா?

யோனத்தான் : குழந்தையால் இவைகளை எப்படி செய்ய முடியும்?

தாவீது : எனவேதான் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுப்பது தவறானது என்று அறிந்து கொள்கின்றோம். அதுவுமில்லாமல் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றோ கொடுத்ததாகவோ வேதத்திலே நாம் எங்கும் பார்க்க முடியவில்லை.

யோனத்தான் : இயேசு கிறிஸ்துவை குழந்தையில் சுத்திகரித்ததாக வேதத்தில் படிக்கிறோமே? (லூக்.2:22)

தாவீது : அது மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி செய்யப்பட்டது என்று அந்த வசனத்திலேயே குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்தாயா? மோசேயின் நியாயப்பிரமாணத்தை நாம் இப்போது கைக்கொள்ள வேண்டியதில்லை (கலா.2:14-21). அது பழைய பிரமாணத்தின்படியான சுத்திகரிப்பே தவிர ஞானஸ்நானம் அல்ல (லேவி.12:1-7).


யோனத்தான் : அப்படியானால் குழந்தைகள் ஞானஸ்நானம் எடுக்காமல் மரித்துப்போனால் அவர்களால் பரலோகம் போக முடியுமா?

தாவீது : நல்ல கேள்வியைக் கேட்டாய் யோனத்தான்! கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்தமுறை இது பற்றி பேசுவோம்.

(மீண்டும் சந்திப்போம்)

சிறுவர் பகுதி

# தந்திரம்



*வேதப்பகுதி: மத்தேயு 4: 1-10*

**ஏமாறிய ஆதாம், ஏவாள்:** தந்திரம் என்றால் சூழ்ச்சி, அல்லது ஏமாற்றுதல் என்று பொருள். பிசாசனவன் தந்திரமுள்ளவன் ஆகையால் ஆதியிலே நம் முற்பிதாக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றினான். "நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ? என்று ஏவாளைப்பார்த்து கேட்டான். அதற்கு ஏமாந்துபோன ஏவாள் நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும்,தோட்டத்தின் நடுவிலே இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன், நீங்கள் சகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார். அதற்கு சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான். இதற்கு கீழ்ப்படிந்து பறித்து புசித்து பாவத்தின்கீழ் தள்ளப்பட்டார்கள்.

**ஏமாறாத கர்த்தர்:** பிசாசு இயேசுவை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் அவனுக்கு பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரைத் தேவாலயத்து உப்பரிகையின்மேல் நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும் ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். நீங்களும் உங்களை ஏமாற்ற வரும் பிசாசை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு எதிர்த்து இயேசுவைப்போல அப்பாலே போ சாத்தானே என்று சொல்வீர்களா?

***மனப்பாட வசனம் : "சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச் செய்தேன்; அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2கொரி.2:11)***

பாடம் - 1

# சபை என்பதன் பொருள்
## MEANING OF THE CHURCH

J.C.Choate

வேதாகமம் சபையைக் குறித்து பேசுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் யாருடைய சபை? எந்த சபை? என்ன சபை? இந்தக்கேள்விகளுக்கும், இன்னும் பல கேள்விகளுக்கும் நேரம் வரும்போது பதில் கிடைக்கும். ஆனால் தற்சமயம் சபை என்றால் என்ன என்பதை கண்டறிவோம். சபை என்றால் எது இல்லை என்பதில் ஆரம்பிப்போம். வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள சபை, கத்தோலிக்கமோ, புராட்டஸ்டண்டோ, யூதசபையோ அல்ல. அது ஒரு பிரிவோ அல்ல. ஒரு அரசியல் அமைப்போ, பிரிதொரு சமூக நல அமைப்போ அல்லது உலகப் பிரகாரமான கட்டிடமோ அல்ல. இவைகளில் எதுவுமாக சபை இல்லாவிடில் பிறகு அது என்ன? பெரும்பாலான மக்கள் சபை என்றால் என்ன என்பதை அறியாதிருப்பதினால் சபையையும் அறிந்து கொள்வதில்லை. அதன் நோக்கத்தையோ, முக்கியத்துவத்தையோ, அதன் ஊழியத்தையோ புரிந்து கொள்ளாததன் விளைவே இது. ஆனால் வேதாகமம் மிகத்தெளிவாக சபை என்றால் என்ன என்பதைக் காட்டுகிறது. சபை என்ற பதம் எக்லீசியா என்னும் கிரேக்க வார்த்தையில் "அழைக்கப்பட்டவர்கள்" என்னும் பொருளில் வருகிறது. எனவே சபை என்பது அழைக்கப்பட்ட மக்களின் சரீரம், அதாவது உலகத்தினின்று பிரித்தெடுத்து தேவனுடைய அன்பின் குமாரனுடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்ட மக்களின் சரீரம் (கொலோ.1:13). அது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம் (1கொரி.12:27). கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்தோரின் கூட்டம் (எபி.5,8,9). அவரால் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டவர்கள் (மாற்.16:16);(அப்.2:47). இன்னொரு வழியில் சொன்னால், சபை என்றால் கிறிஸ்துவை பின்பற்றுவோரின் கூட்டம் என்று பொருள்.

வேதாகமத்தில் சபை என்னும் பதம் இரண்டு அர்த்தங்களில் காணப்படுகிறது, ஒன்று,உலகளாவிய அர்த்தத்தில், "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று கிறிஸ்து (மத்.16:18) கூறும்போது இந்த அர்த்தத்தையே மனதில் கொண்டிருந்தார். உலகளாவிய சபை என்னும் பொருளில் சபை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை இன்னும் அநேக வசனங்கள் குறிப்பிட்டு உள்ளன. அதாவது, உலகில் எங்கே ஒரு சபை இருந்தாலும் அது வேதாகமத்தில் கூறப்பட்ட சபையாக இருப்பின், இயேசு

தாம் கட்டுவதாக கூறிய சபை அதுவே. இரண்டாவது, உள்ளூர் பிராந்திய சபைகளை குறிப்பிட்டு, "கிறிஸ்துவின் சபையார் (சபைகள்) உங்களை வாழ்த்துகிறார்கள்" என்றார் (ரோம.16:16). பல பிராந்திய சபைகள் என்று அவர் குறிப்பிட்டிருப்பது, பல நாமகரண (பிரிவுக்) கூட்டங்களை குறிக்காமல், கர்த்தருடைய சபையின் பல (ஸ்தல) பிராந்திய சபைகளையே அவர் பேசுகிறார். இதை மேலும் விளக்கப்படுத்தவேண்டுமானால், கொரிந்துவிலுள்ள சபை, எபேசுவிலுள்ள சபை, பிலிப்புவில் உள்ள சபை என்றெல்லாம் வேதவசனம் பேசுவதை நீங்கள் காணலாம் (1கொரி.1:2,எபே.1:1,பிலி.1:1). சபையை நாமகரணக் கூட்டங்களின் கண்ணோட்டத்திலேயே அநேகர் பழகிப்போனதால் மேற்சொல்லிய அனைத்தும் சற்று குழப்பமானதாகத் தோன்றக்கூடும். ஆனால் முதல் நாமகரணக் கூட்டம் என்ற ஒன்றை தேவனுடைய வசனத்தில் நாம் படிப்பதில்லை. தொடர்ந்து படித்தால், ஒரு குறிப்பிட்ட சமுதாயவாரியாக உள்ள அநேக பிராந்திய சபைகளைக் குறித்துப் பேசுகிறது. அவைகள் ஒவ்வொன்றும் அந்தந்த சமுதாயத்தில் உள்ள கர்த்தருடைய சபையே. ஆனால் அவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்த உலகளாவிய சபையாக உள்ளது. ஒருவர் தனது நாமகரணக் கூட்டத்தை மறந்து வேதாகமத்திற்குத் திரும்பி கர்த்தர் கொடுத்த சபையை உள்ளபடி காண்பது மிகவும் எளிது.

மேலும் சபையைக் குறித்து புரிந்துகொள்ள, சபையை வேதாகமம் காட்டும் விதத்தில் கீழ்வருகின்ற விதத்தில் புரிந்து கொள்வோமாக.

1. கிறிஸ்துவின் சரீரம்: அது கிறிஸ்துவை தலையாகக் கொண்ட ஆவிக்குரிய சரீரம் (எபே.5:23). ஒரே சரீரம் மட்டுமே உண்டு (எபே.4:4). அந்த ஒரு சரீரம் என்பது ஒரே சபை (கொலோ.1:18).
2. தேவனுடைய வீடு: வீடு என்று வசனத்தில் குறிப்பிடுவதின் மூலம், சபையானது தேவனுடைய குடும்பம் என்னும் பதத்தில் பேசுகிறது என்று நாம் அறிய உதவுகிறது. 1தீமோ.3:15-ல் சபையானது ஜீவனுள்ள தேவனுடைய வீடாயிருக்கிறது என்று பவுல் கூறுகிறார். தேவன் நம்முடைய பிதாவாக இருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம் (கலா.3:26,27,எபே.1:3).
3. தேவனுடைய இராஜ்யம்: இராஜ்யத்திற்குத் தேவை இராஜா, எனவே கிறிஸ்துவே இராஜாவாயிருக்கிறார் (வெளி.17:14). ஆனால் அவர் இராஜாவாயிருப்பாரானால், இராஜ்யம் இப்பொழுது இருக்கவேண்டும், அது இருக்கிறது (அப்.8:12). நாம் அவருடைய பிரஜைகளாகவும், உலகம் அதன் தேசமாகவும், புதிய ஏற்பாடு அதன் சட்டப்புஸ்தகமாகவும் இருக்கிறது. இதுவே சபை (மத்.16:18,19).

4. கர்த்தருடைய திராட்சத் தோட்டம்: கிறிஸ்து செடியாகவும், தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் கொடிகளாகவுமிருக்கிறோம் (யோவா.15:1-8). இதன் கருத்து என்னவெனில், திராட்சத் தோட்டத்தில் வேலை (ஊழியம்) செய்வதையும் கர்த்தருக்கென்று கனி கொடுப்பதையும் குறித்துப் பேசுகிறது.

சபையானது இப்படியெல்லாம் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது, தயவுசெய்து வேதத்தின் வெளிச்சத்தில் இவைகளை வாசித்து உங்களுக்கு நீங்களே பார்த்துப் புரிந்து கொள்ளுங்கள். தேவனுடைய சபை என்ற கண்ணோட்டத்தில் நீங்கள் கண்டால், பிறகு உங்களின் முழு எண்ணங்களும் மாறும், ஒருவேளை உங்கள் வாழ்க்கையே மாறக்கூடும்.

## பாடம் -1

### கேள்விகள்

தயவு செய்து **ஆம்** அல்லது **இல்லை** என்று குறிப்பிடுக:

1. வேதாகமம் சபையைக் குறித்துப்பேசுகிறது.
   ----------
2. சபை என்பது கத்தோலிக்கமே.
   ----------
3. அதிகபட்சமான மக்கள் சபையை முறையாகப் புரிந்து கொள்கின்றனர்.
   ----------
4. சபை என்ற பதம் வேதாகமத்தில் ஒரே ஒரு விதத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.
   ----------
5. தமது சபைகளைக் கட்டுவதாக கிறிஸ்து கூறினார்.
   ----------
6. ஆசியாவிலுள்ள ஏழு சபைகள் என்பது ஏழு வித்தியாசப்பட்ட நாமகரணக் கூட்டங்களைக் குறிக்கிறது.
   ----------
7. சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது.
   ----------
8. ஒரே சரீரம் மட்டும் உண்டு.
   ----------
9. கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார்.
   ----------
10. இராஜ்யம் இனிமேல் வரவேண்டியதாயுள்ளது.
   ----------

**தயவு செய்து சரியான பதிலைக்குறிப்பிடுக:**

1. சபை என்றால் எது இல்லை என்று வரிசைப்படுத்துக.
   ------------------------------------------
2. சபை என்ற பதத்தை விளக்கப்படுத்த கிரேக்க மொழியிலிருந்து வருகின்ற வார்த்தை என்ன?
   ------------------------------------------
3. சபை யாரை உள்ளடக்கியது?
   ------------------------------------------
4. சபை என்னும் பதம் எந்த இரண்டு விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது?
   ------------------------------------------
5. தன் சபையைக் கட்டுவதாக யார் சொன்னது?
   ------------------------------------------
6. அவர் எத்தனை சபைகளை கட்டினார்?
   ------------------------------------------
7. ஆசியாவிலிருந்த ஏழு சபைகள் யாவை?
   ------------------------------------------
8. எத்தனை சரீரங்கள் உள்ளன?
   ------------------------------------------
9. இராஜாதி இராஜா யார்?
   ------------------------------------------
10. கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தில் நாம் என்ன செய்ய வேண்டியவர்கள்?
   ------------------------------------------

**தயவு செய்து பின் வருவனவற்றிற்கு சுருக்கக் குறிப்பு வரைக:**

1. எக்லீஸியா ----------------------
2. கிறிஸ்துவின் சரீரம் --------------------
3. தேவனுடைய வீடு --------------------
4. தேவனுடைய இராஜ்யம் ----------------
5. கர்த்தருடைய திராட்சத்தோட்டம் ---------------

**வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. யோவா.5:39**

# நான் உலகத்தின் "வேடிக்கை"யான காரியங்களை அனுபவிக்க விரும்புகிறேன்
# I Want to Enjoy 'FUN' Things of the word

-Betty Burton Choate



ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களை பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய் **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய-வெறுப்பு மற்றும் சிலுவை-சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய்விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார் ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா "நன்மை"யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

● **உலக இன்பம்.** ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

● தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்: தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது "விதிகளை" மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் 'பாவம்'போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

● ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு: ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை

அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது 'சரி' என்பதே அடிப்படை "தத்துவம்" என்பதாகயிருக்கிறது.

**ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

✳ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறான்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறான்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?

யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? ஒருவள் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள் யார்? தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்ககீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதிசம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? ஒருவன் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக யார் வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

✳ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளை நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகநல்ல காலத்தை வாக்குப் பண்ணுகிறான். ஆனால் ஒருவன்

தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்கொள்ளுகிறதையெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

✳ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன் சுய- நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம்பண்ணகிறபோது என்ன நடக்கிறது? பொய்,ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப் படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம்,யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் "மாய்த்துக்கொள்ள"-கொன்றுவிட- ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ள வனா கவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாய மற்ற கொடுங்கோன்மையானவை 'கட்டளை'அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

-தமிழில் குளோரி அர்ஜுனன்

**தெரிந்து கொள்ளுங்கள்**

இப்பொழுது நாம் உபயோகித்து வரும் தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பை செய்தவர் ஹென்றி பவர் என்பவர் ஆவார். 1867-ல் இம்மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. கடந்த 135 ஆண்டுகளாக தமிழ் மக்களால் இவ்வேதாகமம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. -நன்றி சத்தியம் மாத இதழ்

## வேதஅறிவுப்போட்டி எண் 43-ன் விடைகள்

1. ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய - நீதி.31:8
2. சிநேகிதரைச் -லூக்.16:9
3. மிருகங்களுக்கு -சங்.49:20
4. தேவனாலே -ரோம.2:29
5. அச்சாரத்தையும் -2கொரி.1:22
6. மனாசே -2நாளா.33:20
7. கோலினாலும், மிலாற்றினாலும் -ஏசா.28:27
8. யோனா -யோனா.2:9
9. உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் -வெளி.17:14
10. பவுல், தீமோத்தேயுவுக்கு -2தீமோ.2:22

## வேதஅறிவுப்போட்டி எண் 43ல்வெற்றிபெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள் | வத்தலக்குண்டு | Dr.ஜெயசிங் | சென்னை |
| B.ஜெயராணி | கன்னியாகுமரி | V.ரத்னா | எம்.ஜி.பாளையம் |
| Mrs.கிரேஸ்லூயிஸ் | நிலக்கோட்டை | A.ரெபேக்காள் | மதுரை |
| R.பிளசன் | கன்னியாகுமரி | S.செல்லமணி | காங்கயம் |
| B.S.தானியேல் விஸ்வநாத் | செட்டிபாளையம் | A.ஜோதிகாந்தம் | பாண்டியநல்லூர் |
| J.நிர்மலாதேவி | கொடைக்கானல் | G.P.ஏசையன்ராஜ் | கோபி |
| S.சிங்காரவேலு | மதுரை | G.மெர்சிரூபி | கொடுவாய் |
| J.S.நிர்மலாஜான் | மதுரை | R.ஸ்வாதி ரவி | வெட்டுக்காடு வலசு |
| Mrs.வனிதா சாமுவேல் | மதுரை | N.பொன்னி | மதுரை |
| Mrs.ஜாஸ்மின் வின்செண்ட்ராஜ் | மதுரை | R.பானுமதி | ஜேடர்பாளையம் |
| P.S.லலிதாபிரேமகுமாரி | மதுரை | T.அன்னாள் | செட்டிபாளையம் |
| S.ஆனந்தராஜ் | ஈரோடு | T.வேலுச்சாமி | ஜேடர்பாளையம் |
| P.மகாலிங்கம் | மதுரை | R.பூமணியன் | செட்டிபாளையம் |
| T.சிவக்குமார் | சிலுவத்தூர் | P.கந்தசாமி | கீரனூர் |
| S.தண்டபானி | சிலுவத்தூர் | S.R.பெரியசாமி | சேளூர் |
| S.ராஜபிரசாத் | மதுரை | N.கமலவேணிகண்ணையன் | சென்னை |
| G.ஜெபாஸ்டின் | செட்டிபாளையம் | A.ராபர்ட் கிளைவ் | ஷில்லாங்(மேகாலயா) |
| R.ரூத் | மதுரை | M.துரைசாமி | வெள்ளக்குளம் |
| IRA.எதிராஜன் | சங்ககிரி | R.சாமுவேல் | ஊதியூர் |
| Mrs.எஸ்தர்சேகர் | கோபி | V.கோவலன் | மதுரை |
| A.சேவியர்மேரி | மதுரை | L.ஐசக் | விரனம் பாளையம் |
| K.பிரஜீதா | ஈரோடு | A.கந்தசாமி | தெக்கலூர் |
| | | M.ரோஸ்மேரி | சென்னை |

### *ஒரு வாசகரின் சந்தோஷம் .......*

அன்புச் சகோதரருக்கு! ஸ்தோத்திரம் உங்கள் பத்திரிக்கையின் மூலம் வேத அறிவைப்பெற ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அதிலும் வேத அறிவுப்போட்டியின் விடைகளை கண்டுபிடிக்க எந்தநேரமும் பைபிளும் கையுமாகவும், இதில் இருக்குமா? அதிலிருக்குமா, என்று ஆர்வமாக தேடி, விடைகளை கண்டு பிடித்தபின் ஒரு சந்தோஷம் இருக்கிறதே 'அப்பா' அதை எப்படி சொல்வதென்று தெரியவில்லை தேவனோடு கூடவே இருக்க செய்ததற்கு நன்றி.

உங்கள் ஊழியத்திற்காகவும், பத்திரிகை ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறேன் நன்றி.

"அன்றியும், ஒரு ஸ்திரீ.....சந்தோஷப்படுங்கள் என்பாள்அல்லவா?" (லூக்.15:8,9) என்ற வசனத்தின்படி *இந்த வாசகரோடு நாமும் சந்தோஷப்படுவோம்.*

by
S.செல்லமணி
காங்கயம்

# வேறொரு நாமம் இல்லை
# None Other Name

*சகோ.பிரபுதாஸ் மல்வி*

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் தனிப்பட்ட பெயர் உண்டு. பெயர்களின்றி நாம் ஒருவரையொருவர் அழைக்கவோ, அடையாளப் படுத்திக்கூறவோ முடியாது. நம் எல்லோருடைய நாமத்தைக் காட்டிலும் மேலான, உன்னதமான ஓர் நாமத்தை இந்த செய்தியின் மூலம் உங்கள் சிந்தனைக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

பெந்தேகொஸ்தே நாளில் சபையானது ஸ்தாபிக்கப்பட்டு சில நாட்கள் உருண்டோடினபோது, ஏராளமான பொறுப்புகளை சபையானது ஏற்றுக்கொண்டிருந்தது. இந்த இக்கட்டான சூழ்நிலையில், யாரும் எதிர்பாராவண்ணம் ஒரு சம்பவம் நடைபெறுகிறது. பேதுருவும் யோவானும் பிறவியிலிருந்தே சப்பாணியாய் இருந்த ஒரு மனிதனை தேவாலயத்தின் வாசலில் சுகப்படுத்தினார்கள். இதனை அப்போஸ்தலர் 3வது அதிகாரத்தில் காணலாம். இதைத் தொடர்ந்து, அவர்களிருவரும் சிறையிலடைக்கப்பட்டனர். மறுநாளிலே, ஜனங்களின் அதிகாரிகள் உட்பட அநேகர் கூடியிருக்கையில் அவர்களுக்கு முன்பாக இவர்கள் நியாயம் விசாரிக்கப்படுகின்ற வேளையில், "எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே சப்பாணியை குணப்படுத்தினீர்கள்?" என்ற ஓர் கேள்வியை பேதுரு,யோவான் ஆகியோரைப்பார்த்து கேட்டனர் (அப்.4:7). அதற்கு பேதுரு, "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே" என்று பதிலளித்தான் (அப்.4:10). மேலும் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான் (அப்.4:12). இயேசு கிறிஸ்துவே சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார் என்ற உண்மையை அனைவருமே உணரும்படியாக பேதுரு எடுத்துரைத்தான். பாவிகளை இரட்சிக்கவும், அவர்களின் பாவங்களை மன்னிக்கவும் பரலோகத்திற்கு அழைத்து செல்லவும் வல்லமையுள்ள வேறொரு நாமம் இவ்வுலகில் இல்லை என்பதை எங்கும் பறைசாற்றினான்.

ஆதி கிறிஸ்தவர்கள், இயேசுவின் நாமத்தை தங்களது முக்கிய செய்தியாக அறிவித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவர்கள் இயேசுவை தங்களது பரிகாரியாகவும், மத்தியஸ்தராகவும் நம்பிக்கையாகவும் பிரசங்கித்து வந்தனர். அதனால் தான் அவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தை பிரசங்கித்து அவருடைய நாமத்தை பிரஸ்தாபம் செய்தனர் (அப்.8:4). பிலிப்பு என்பவன், ஓடிச்சென்று இயேசுவைக் குறித்து

பிரசங்கித்தான் (அப்.8:35). சிலுவையிலறையப்பட்ட இயேசு கிறிஸ்துவையேயன்றி, வேறொருன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்திருந்தேன் என்று கொரிந்து சபையாருக்கு பவுல் கூறுகிறான் (1கொரி.2:2). உண்மையிலேயே, இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமமில்லை என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். அவர்கள் இயேசுவின் நாமத்தைப் பற்றிக்கொண்டதின் காரணமாக அவர்களின் இரட்சிப்புக்கு அவர் காரணமானார். வானத்திலும், பூமியிலும் வல்லமையுள்ள நாமம் இயேசு கிறிஸ்துவின் நாமமே என்று ஆதி கிறிஸ்தவர்களும், அப்போஸ்தலரும் தைரியமாக எடுத்துரைத்தமைக்கு பல காரணங்களுண்டு. அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கு காண்போம்.

***இயேசுவின் ஞானம் :***

இயேசுவைப்போல் ஞானத்தில் சிறந்த வேறொரு நாமம் இல்லை. அவருடைய ஊழியத்தின்போது, ஒருமுறை தாம் சாலமோனைக்காட்டிலும் பெரியவர் என்று பகிரங்கமாக கூறினார் (மத்.12:42). ஆம்! அவர் சாலமோனைக் காட்டிலும் ஞானத்தில் உயர்ந்தவர்தான். இதை, அவருடைய உறுதியான தன்மையும், சிறந்த பேச்சும் உறுதிப்படுத்தின. இயேசுவானவர், தமது பன்னிரெண்டாம் வயதினிலே திறம்பட போதிக்கும் திறமை பெற்றிருந்தார். அவர் சிறுவயதில் எருசலேம் தேவாலயத்திற்கு சென்றிருந்த பொழுது, அங்கு கற்றறிந்த யூத போதகர்களும், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் நன்கு தேறியிருந்தவர்களும் இருந்தனர். அவர்கள், அவருடைய பேச்சுதிறமையையும் ஞானத்தையும் கண்டு பிரமித்தனர். அவர் அளித்த பதில்களைக் குறித்து ஆச்சரியப்பட்டனர் (லூக்.2:47). ஒரு சமயத்தில், இயேசு நாசரேத்திலுள்ள ஜெப ஆலயத்தில் ஒரு ஓய்வுநாளிலே உபதேசம் செய்தபோது, அதைக்கேட்ட அநேகர், ஆச்சரியப்பட்டு இவருக்கு கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? என்று திகைத்தனர் (மாற்.6:2). அவரது போதனை அதிகாரமுடையதாயிருந்தது. அவர் பலத்த செய்கைகளை செய்ய வல்லவராயிருந்தார். எனவேதான் இயேசுவின் ஞானம் உபதேசங்கள் ஆகியவை இன்றும் மதிப்பிற்குரியவைகளாக நிலைத்து நிற்கின்றன. அவர் பேசியது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்பது உண்மையே (யோவா.7:46). மனிதரை அவர்களது பாவங்களிலிருந்து இரட்சித்து அவர்களை பரலோகத்திற்கு வழிநடத்திச் செல்ல வல்லமையுள்ள ஞானம் படைத்த நாமம் வேறு எந்த நபருக்கும் கிடையாது.

***இயேசுவின் அன்பு :***

இயேசு பிறமக்களிடத்தில் அன்புமிகுந்தவராக வாழ்ந்தார் மற்றவர்களின் தவறுகளை மன்னிக்க அவர் எப்பொழுதுமே ஆயத்தமாக இருந்தார். பிறர்மீது அளவுகடந்த அன்பு செலுத்தும் பண்பு இயேசுவிடம்

இயல்பாகவே அமைந்திருந்தது. இதற்கு மூலகாரணம் அவரது தன்னலமற்ற ஜீவியமாகும். சீகார் எனும் ஊரில் வாழ்ந்த ஒரு ஸ்திரீயினிடத்தில் அவர் நான் பிறருக்கு ஜீவதண்ணீரைக் கொடுப்பேன் என்று கூறினார். இந்த ஸ்திரீயின் குலத்தினர் யூதர்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள்; இவர்களுடன் யூதர்கள் சம்பந்தங்கலவாதவர்களாயிருந்தனர்(யோவா4:9). இவள் ஏற்கனவே ஐந்து முறை திருமணமானவள். இயேசு இவ்வளை நோக்கி மனதுருகி அவளை ஆவிக்குரிய வழியில் நடத்தினார். அவளது உள்ளான தாகத்தைதீர்க்க ஜீவத்தண்ணீரைக் கொடுத்தார். இயேசு தமது விரோதிகளையும் கூட நேசித்தார். அவர் ஆயக்காரனாகிய சகேயுவின் வீட்டில் உண்டு மகிழ்ந்தார். தன்னைக்கொல்ல வந்த கொலையாளிகளிடத்திலும் அன்புடன் நடந்து கொண்டார். தன்னை வெறுத்தவர்களுக்காகவும், துன்புறுத்திய வர்களுக்காகவும் அன்பு வார்த்தைகளால் ஜெபித்தார். நாமும் நமது சகோதர, சகோதரிகளிடத்தில் மட்டுமல்லாமல், நமது விரோதிகளிடத்திலும் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதுவே அவரது போதனையாகும். நாம் ஒருவரிலொருவர் அன்பு கூருகிறோமா? நமது விரோதிகளுக்காகவும், நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறோமா? (மத்.5:44). நாம் ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டுமென்பதே நாம் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது (1யோவா.3:11). இயேசுவைப்போன்று அன்பிற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர்கள் உலகினில் யாருமில்லை என்பது நிச்சயம். உலக சரித்திரத்தில், இயேசுவின் அன்பிற்கு இணையான சம்பவங்களை நாம் படித்ததில்லை பார்த்ததுமில்லை. இயேசுவின் அன்பின்மூலம் நாம் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளுகிறோம். பாவமன்னிப்பை அருள பிறர்நலத்திற்காக தன்னையே தியாகம் செய்த இயேசுவின் அன்பான நாமத்திற்கொத்த வேறொருநாமம் உலகில் இல்லை.

***இயேசுவின் வல்லமை :***

இயேசு, சகல வல்லமையையும் உடையவராயிருந்தார். தனது வாழ்நாளில் ஒப்பற்ற அநேக அற்புதங்களை செய்தார். காற்றும் கடலும் இவரது வார்த்தைக்கு அடங்கின. தீராவியாதிகளும் இவரால் பூரணமாக குணமாயின. இவரது வல்லமைக்கு நிகரானவர் வேறொருவருமே இந்த உலகில் கிடையாது. இயேசுவின் வல்லமையை யோவான் 8ம் அதிகாரத்தில் தெளிவாக காணலாம். அவரை சோதிக்கும்படியாகவும், குற்றம் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடும், சில வேதபாரகரும் பரிசேயரும், விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை அவரிடத்தில் கொண்டுவந்தனர். அப்பொழுது இயேசு உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று கூறினார். இதைக்கேட்ட அவர்கள் அவளை விட்டுவிட்டு போய்விட்டனர். பின்பு இயேசு அவளை நோக்கி, இனிமேல் பாவம் செய்யாதே என்று சொல்லி அவளை மன்னித்து அனுப்பிவிட்டார்.

இயேசுவின் வல்லமையால் இரக்கம்பெற்ற அந்த ஸ்திரீ சந்தோஷமாய் திரும்பிச்சென்று, தன் பாவ வாழ்க்கையை விட்டுவிடதீர்மானித்தாள் (யோவா.8:3-11). பாவத்தை மன்னிக்கும் வல்லமை இயேசுவுக்கு மட்டுமே இருந்தது. அவர் சகேயு எனும் ஆயக்காரனின் பாவங்களை மன்னித்து, அவனை ஒரு புதிய மனிதனாக மாற்றினார் (லூக்.19:1-10). அன்பான வாசகரே, நீர் எப்பொழுதாவது இயேசுவின் வல்லமையை சிந்தித்து பார்த்ததுண்டா? உமது பாவ வாழ்க்கையை மாற்றி அமைக்க வல்லமை படைத்த நாமம் இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொன்றுமல்ல. அவர் மரணத்தை வென்று தமது வல்லமையை நிரூபித்தார். அவரைப்போல மரணத்தை வென்றவர்கள் உலகினில் யாரேனும் உண்டோ? (1கொரி.15:4,20).

பேதுரு தனது வாழ்க்கையில், இயேசுவின் வல்லமையை உணர்ந்து கொண்டான். ஒரு சமயத்தில் அவரை மறுதலித்தவனாக காணப்பட்டபோதிலும் அவனை இயேசு கைவிட்டுவிடவில்லை. இயேசு அவனிடத்தில் வந்து, அவனது வாழ்க்கையையே மாற்றி அமைத்து ஓர் முக்கியமான பொறுப்பையும் அவனிடத்தில் ஒப்புவித்தார் (யோவா.21:15-17).

இயேசுவைப்போல் வாழ்ந்து காட்டியவர் உலகில் வேறொருவருமில்லையே! புதிய வாழ்வை நமக்களிக்கத்தக்க நாமம் இயேசுவின் நாமமல்லாமல் வேறொன்றுமில்லை. இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தின்மூலமே நாம் பாவமன்னிப்பைப் பெற்று தேவனுடைய பிள்ளைகளாக திகழ்கிறோம். இயேசுவின் நாமத்தில் நித்திய ஜீவன் நமக்குண்டு. இயேசுவின் நாமத்தில் ஜீவகிரீடம் நமக்குண்டு (வெளி.2:10). இயேசுவின் நாமமே வல்லமையுள்ள நாமம் இயேசுவின் நாமத்திற்கு இணையாக "வேறொரு நாமமில்லை".

**மருத்துவ ஆலோசனை**

"நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1தீமோ.5:23)

***பொது அறிவு சோதனை***

1. வானம் நீல நிறமாக காட்சி அளிக்க காரணம் என்ன?
அ) ஒளி விலகல் ஆ)கதிர் வீச்சு இ)துகள்களால் ஒளிச்சிதறல்
2. முதன் முதலில் விண்வெளிபயணம் செய்த வீராங்கனையார்?
அ)வாலன்டினா ஆ) அனுசுயாதேவி இ)லைகா
3. செய் அல்லது செத்து மடி என்ற தாரகமந்திரத்தை சொன்னவர்யார்?
அ)பாலகங்காதர திலகர் ஆ)மகாத்மாகாந்தி இ)வ.உ.சிதம்பரனார்
4. ஒரு குதிரை திறன் என்பது எத்தனை வாட்?
அ)700 வாட் ஆ)736 வாட் இ)746 வாட்
5. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்ததாக கூறப்படுபவர் யார்?அ)நீரோ ஆ)ஜீலியஸ் சீஸர் இ)ஆண்டனி

விடைகள்
1.துகள்களால் ஒளிச்சிதறல்
2.வாலன்டினா
3.மகாத்மாகாந்தி
4.746 வாட்
5.நீரோ

## இயேசு

Jesus

*என்ன கேள்வியானாலும்,*
*அவரே பதிலாயிருக்கிறார் (யோவா.14:6)*
*என்ன பிரச்சனையானாலும்,*
*அவரே பரிகாரி (மத்.11:28,29)*
*என்ன காயமாயிருந்தாலும்,*
*அவரே சுகமாக்குகிறவர் (லூக்.4:18)*
*என்ன அடிமைத்தன மாயிருந்தாலும்,*
*அவரே விடுவிக்கிறவர் (யோவா.8:32)*
*என்ன பாரமாயிருந்தாலும்,*
*அவரே மேற்கொள்ளுகிறவர் (யோவா.16:33)*
*என்ன தேவையாயிருந்தாலும்,*
*அவரே சப்ளையர் (மத்.7:7,8)*
*என்ன பாவமாயிருந்தாலும்,*
*அவரே மன்னிக்கிறவர் (எபி.10:12-17)*

**-The Voice of Truth International**

## வாய்

1. மூடனுடைய வாய் அவனுக்குக்கேடு -நீதி.18:7
2. அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு நிரம்பும் -நீதி.18:20
3. தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விளக்கிக் காக்கிறான் -நீதி.21:23
4. பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி -நீதி.22:14
5. உன் வாய் அல்ல, புறத்தியானே உன்னைப் புகழட்டும் -நீதி.27:2
6. இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும் -ரோம.10:10

## ஜெபியுங்கள்

☆ இம்மாதம் நடைபெறவிருக்கும் 14வது வாசகர் கருத்தரங்கிற்காக ...
☆ கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட ...
☆ கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கிற ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட ...



**பொருள்** : தேவனுடைய நீதி மற்றும் சர்வவல்லமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாய சீர்திருத்தம்

**ஆக்கியோன்** : மீகா

**காலம்** : ஏறக்குறைய கி.மு.735-700

**திட்டவரைக் குறிப்பு** :

★ கர்த்தர் சகல பாவம், சமயம், பொருளாதாரம், அரசியல் போன்றவைகளை நியாயந்தீர்க்கிறார் (1-3);

★ கர்த்தர் அனைவருக்கும் சமாதானத்தின் நாளையும் தொழுகையின் நாளையும் வாக்குப்பண்ணுகிறார்

★ கர்த்தர் இரட்சிப்பிலும் தம்முடைய எதிர்பார்ப்புகளைக் காண்பிப்பதிலும் தம்முடைய ஜனங்களுக்கு எல்லா வாய்ப்புகளையும் ஏற்படுத்தி கொடுத்திருந்த அந்த ஜனத்தை நியாயந்தீர்க்கிறார் (6:1-7:6)

★ நியாயத்தீர்ப்பிற்குப் பிறகு கர்த்தர் அன்பிலும், மன்னிப்பதிலும் தம்முடைய ஜனங்களைப் புதுப்பிப்பதிலும் அக்கரையுள்ளவராயிருப்பார் (7:7-20)

**சிறப்புச் செய்தி :**

"மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்".


**வரலாற்று பின்னணி :**

யூதாவிலுள்ள தேவனுடைய மக்கள் தேவனிடம் காண்பித்த மாறுபாட்டைக் குறிப்பிட்டு, அவர்கள் தனிநபர்களாகவும், ஒரு தேசமாகவும் கர்த்தரிடம் மனந்திரும்பும்படி அவர்களுக்காக பரிந்து பேசுதல்.

**ஆன்மீக ஆலோசனை**

"உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்"(ரோம.6:19)

**சீர்தூக்கிப் பார்** **"கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்"( நீதி.16 : 2 )**



"நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?"( 1பேது.4:18 )

# வேத அறிவுப் போட்டி எண்.44

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும்.

1. வேசிப்பணையத்தினால் சேர்க்கப்பட்டது, திரும்ப எப்படிப்போகும்?
2. முப்புரிநூல் சீக்கிரமாய் என்ன செய்யாது?
3. நீதியும் நியாயமும் யாருடைய சிங்காசனத்தின் ஆதாரம்?
4. விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், எவர்களால் உண்டாயிற்று?
5. மெலித்தா தீவின் முதலாளி யார்?
6. கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் என்ன செய்யப்பட்டவனுமாயிருக்கிறான்?
7. நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக் காரனல்லவே என்று சொல்வது யார்?
8. யார் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்?
9. அக்கிரமமானது எதைப்போல முறிந்துவிழும்?
10. தன் மாமன் சொல்கேட்டு அவன் சொன்னபடியெல்லாம் செய்தவன் யார்?


## நடப்புச் செய்திகள்

- இந்தியா உள்பட 84 நாடுகளை தீவிரவாதிகள் தாக்கும் அபாயம் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ்புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
- தமிழ் நாட்டில் மொத்தம் 4கோடியே 71 லட்சம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். 39 பாராளுமன்ற தொகுதிகளில், 35 தொகுதிகளில் பெண்வாக்காளர்கள் அதிகப்படியாக இருக்கிறார்கள்.
- ராமேஸ்வரத்தில் கப்பல்களுக்கு வழிவிட்டு பிரிந்து, இணையும் வகையில் அமைக்கப்பட்டு உள்ள பாம்பன் ரெயில் பாலத்தை மாற்றி விட்டு புதிய பாலம் அமைக்க உலக அளவில்ஆலோசனை கோரப்பட்டுள்ளது.
- சூரியனை சுற்றிவருகின்ற 9 கோள்களில் 5 கோள்களை ஒரே நேரத்தில் வெறுங்கண்களால் பார்க்கும் வாய்ப்பு.
- இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியா அபார வெற்றி.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun, Mon Wed, Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th April 2004.

**Monthly Magazine**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.